## ஜி.எஸ்.டி. சாலையில் 15 கி.மீ. வழித்தடம்

# விமான நிலையம்–கிளாம்பாக்கத்துக்கு மெட்ரோ ரெயில் வசதி

## ரூ.3,500 கோடியில் அமைக்கப்படுகிறது

சென்னை,நவ.12–

ரூ.3,500 கோடி மதிப்பீட்டில் 15 கி.மீட்டர் தூரத் துக்கு ஜி.எஸ்.டி. சாலையில் விமான நிலையம்– கிளாம்பாக்கத்துக்கு புதிதாக மெட்ரோ ரெயில் வசதி அமைக்க திட்டமிடப் பட்டுள்ளது.

### மெட்ரோ ரெயில்

சென்னை மாநகர போக்குவரத்து நெருக்கடியை குறைப்பதற்காக மெட்ரோ ரெயில் திட்டம் உரு வாக்கப்பட்டது. வண்ணாரப் பேட்டை – விமான நிலையத் துக்கு தற்போது பயணிகள் சேவை நடந்து வருகிறது.

பயணிகள், பொதுமக்கள் வரவேற்பை தொடர்ந்து சென்னை மாநகரம் முழு வதும் மெட்ரோ ரெயில் சேவை விரிவுபடுத்தும் பணிகள் நடந்து வருகிறது.

2–வது கட்டமாக மாதவரம்– சிறுசேரிக்கு மெட்ரோ ரெயில் வழித்தட பாதை அமைக்க திட்டப்பணி ஆய்வுமுழு வீச்சில் நடந்து வருகிறது.

### விமான நிலையம் – கிளாம்பாக்கம்

இந்த நிலையில் சென்னை விமான நிலையத்தில் இருந்து வண்டலூர் கிளாம் பாக்கத் துக்கு 15.3 கி.மீட்டர் தூரத் துக்கு ஜி.எஸ்.டி. சாலையில் புதிய மெட்ரோ ரெயில் வழித்தடம் அமைக்க திட்ட அறிக்கை தயாரிக்கப்பட உள்ளது.

ரூ.3,500 கோடி மதிப்பீட் டில் இந்த பணிகள் வருகிற 2021–ம் ஆண்டு தொடங்க திட்டமிடப்பட்டுள்ளது. ஜி.எஸ்.டி. சாலை வழித்தடத் தில் விமான நிலையத்தில் இருந்து பல்லாவரம், குரோம் பேட்டை, திரு.வி.க.நகர் தாம்பரம், இரும்புலியூர், பெருங்களத்தூர் ஆர்.எம்.கே. நகர், வண்டலூர், வண்டலூர் வனவியல் பூங்கா, கிளாம்பாக்கம் உள்பட 13 ரெயில் நிலையங்கள் அமைக்கப்படுகிறது.

### உயர்மட்ட பாதையில்

புதிய மெட்ரோ ரெயில் வழித்தடம் ஜி.எஸ்.டி. சாலையில் உயர்மட்ட பாதையில் அமைக்கப்பட உள்ளது. சென்னை விமான நிலையத்தில் இருந்து புதிய மெட்ரோ ரெயில் வழித்தட பாதை கிளாம்பாக்கம் பஸ் டெர்மினல் வரை நீட்டிக்கப் படுகிறது

இதுகுறித்து மெட்ரோ ரெயில் அதிகாரி ஒருவர் கூறியதாவது:–

### 2021–ல் பணிகள்

தென் சென்னை பகுதி யில் அனைத்து பகுதி மக்களையும் கவரும்விதமாகபுதியமெட்ரோ ரெயில் வழித்தடம் அமைக்க திட்டமிட்டுள்ளோம். விமான நிலையம் – கிளாம்பாக்கம் வரை 12.3 கிமீட்டர் தூரத்துக்கு ஜி.எஸ்.டி. சாலையில் உயர் மட்டபாதையில் மெட்ரோ ரெயில் வழித்தட பாதை உருவாக்கப்படும்.

ரூ.3,500 கோடி மதிப்பீட் டில் 13 ரெயில் நிலையங்கள் கட்டப்படுகிறது. இந்த பணிகள் குறித்த திட்ட அறிக்கை 10 மாதங்களில் தயாரிக்கப்படும். 2021–ல் இந்த வழித்தட பாதை பணிகள் தொடங்கும்.

இவ்வாறு அவர் கூறினார்.